## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் – சுயநிதி தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் கல்வி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கருக்கு கல்வி உதவித்தொகை விடுவிக்க ஆதிதிராவிட நல இயக்குநருக்கு அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்(ஆதிந–3)துறை**

அரசாணை (நிலை) எண்.124

நாள்: 19.09.2023.
சோபகிருது வருடம்,
புரட்டாசி 02–ஆம் நாள்.
திருவள்ளுவர் ஆண்டு 2054.
படிக்கப்பட்டது.

1. அரசாணை(நிலை)எண்.6, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்:09.01.2012
2. அரசாணை(நிலை)எண்.92, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை , நாள்: 11.09.2012
3. தமிழ்நாடு தொழிற்பயிற்சி நிலைய சங்கம் சார்பாக தொடரப்பட்ட வழக்கு W.P(MD)No.12631 of 2016–ன் இறுதி தீர்ப்பாணை, நாள்: 13.03.2023
4. அரசாணை(நிலை)எண்.53, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை , நாள்: 14.03.2023
5. ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அவர்களின் கடித ந.க.எண்.35275/கை.ப 1/2023, நாள்: 11.08.2023

------

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சுயநிதி கல்வி நிலையங்களில் அரசு ஒதுக்கீடு செய்யும் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணாக்கருக்கு கட்டாய, திருப்பி செலுத்தப்படாத அனைத்து கல்வி கட்டணங்களையும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகையாக வழங்க அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சுயநிதி கல்வி நிறுவனங்களில் அனைத்து விதமான படிப்புகளுக்கும் இலவச / கட்டண இருக்கையில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கருக்கு அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டணக்குழு நிர்ணயிக்கும் கல்விக் கட்டணங்களை மற்றும் அரசு நிர்ணயிக்கும் கல்வி கட்டணங்கள் போன்றவற்றை போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகையாக விடுவிக்க வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. இந்நிலையில், சுயநிதி தொழிற்பயிற்சி நிலையங்களில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கருக்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை வழங்கக் கோரி தமிழ்நாடு தொழிற்பயிற்சி நிலைய சங்கம் சார்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு W.P(MD)No.12631 of 2016 தொடரப்பட்டது.

4. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்பட்டது.

"By taking into consideration the counter and the report of the Adi Dravidar and Tribal Welfare Department, W.P(MD)No.12631 of 2016 is disposed of by directing the respondents to complete fee fixation and all other necessary action for the purpose of extending the benefits of GO(MS)NO. 6, AD&TW Dept, Dated: 09.01.2012 and GO(MS)NO. 92, AD&TW Dept, Dated: 11.09.2012, to the students of the Adi Dravidar community who are studying in Private Industrial Training Institutes. The above exercise shall be completed within a maximum period of six months from the date of receipt of a copy of this order."

5. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெறும் அனைத்து பயிற்சியாளர்களுக்கும் (எவ்வித வருமான உச்ச வரம்பும் இன்றி) கீழ்க்காணும் பயிற்சிக்கட்டணங்கள் வழங்க தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மூலம் ஆணை வெளியிடப்பட்டது.

| வ.எண் | தொழிற்பிரிவு | மீள திருப்பப்படும் பயிற்சிக் கட்டணம் (பயிற்சியாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு) |
|---|---|---|
| 1. | பொறியியல் தொழிற்பிரிவு | ரூ.16,800/- |
| 2. | பொறியியல் அல்லாத தொழிற்பிரிவு | ரூ.13,000/- |

6. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஆணையர், வேலைவாய்பு மற்றும் பயிற்சித்துறை அவர்கள் அரசாணை(நிலை)எண்.53, தொ.ந(ம)தி.மே.(எஸ்2)துறை, நாள்: 14.03.2023–இல் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெறும் அனைத்து பயிற்சியாளர்களுக்கும் (எவ்வித வருமான உச்ச வரம்பும் இன்றி) பயிற்சிக்கட்டணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்றும், எனவே மேற்காணும் அரசாணையில் நிர்ணயிக்கப்பட்ட தொகைகளையே சுயநிதி தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் நிர்வாக ஒதுக்கீட்டில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கருக்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகையாக வழங்க ஆணை வழங்குமாறு தொழிலாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டு துறையை கேட்டுக்கொண்டுள்ளார்.

7. மேலே பத்தி 6 இல் உள்ள ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அவர்களின் கருத்துருவின் அடிப்படையில் அரசாணை(நிலை) எண்.53, தொ.ந(ம)தி.மே. (எஸ்2)துறை, நாள்: 14.03.2023–இல் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெறும் அனைத்து பயிற்சியாளர்களுக்கும் தொழிலாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டு துறையால் வழங்கப்பட்டு வரும் கீழ்காணும் பயிற்சிக் கட்டண தொகைகளையே, போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் சுயநிதி தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் நிர்வாக ஒதுக்கீட்டில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கருக்கும் வழங்க ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

| வ.எண் | தொழிற்பிரிவு | மீள திருப்பப்படும் பயிற்சிக் கட்டணம் (பயிற்சியாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு) |
|---|---|---|
| 1. | பொறியியல் தொழிற்பிரிவு | ரூ.16,800/– |
| 2. | பொறியியல் அல்லாத தொழிற்பிரிவு | ரூ.13,000/– |

8. இவ்வாணை தொழிலாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் ஆ.சா.எண்.5910/எஸ்2/2023-2, நாள்: 07.09.2023-இல் பெறப்பட்ட குறிப்பின்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. லட்சுமி பிரியா
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>

இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005
இயக்குநர் பழங்குடியினர் நலன், சென்னை-600 005
ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை-600 032
நகல்:
மாண்புமிகு அமைச்சர், ஆதிதிராவிடர் நலம் அவர்களின் நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை-600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையில் கூடுதல் தலைமை செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை-600 009.
நிதித் (ஆதி(ம)ப.ந) துறை, சென்னை-600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (எஸ் 2) துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

மு. சுகந்தா 19/9/23
பிரிவு அலுவலர்

ப.பி
19/9/23